# கடற்கரை கவியரங்கு– 644

## நாள்: 01-12-2024

## வாழ்வியல் அறம் அறிவோம்!

கண்கள் சூடும் காட்சியில்  மனம் கலந்து நிறைந்திடில்,
மண்ணகம் போற்ற நாளும் மகிழ்ந்தே வாழ்ந்திடலாம்!
விண்ணகம் எழுந்த விடியலாய்  நாளது பிறந்திடுமே!
தண்மையாய்ச் சூழல் தழைந்து நிறைந்திட மனம்,

தன்னிகரில்லா நிலையைத் தானே அடைந்திடுமே!
பொன்னிகர் வாழ்வாய் பூரித்தே மகிழ்ந்திடலாம்!
தென்றலும் புயலும் சீர் காற்றின் வடிவமன்றோ?
மன்னிய உறவில்  நாம் மகிழ்ந்தே வாழ்ந்திடலாம்!

மனமதின் நன்நிறைவை முகமது காட்டுமன்றோ!
சினமது இல்லாச் செம்மையாய் மனமெழுமே!
குணமதில் குன்றெனக் குவலயம் போற்றிடுமே!
பணமெனும் தனமதில் படரா மனம் கொள்வோம்!

பரந்து விரிந்த உலகியல் அறிந்து தெளிந்திடுவோம்!
உரமதைக் கண்ட செடிகள் போலே செழித்திடலாமே!
தரம் கண்டு வாழ்வின் தளங்களைக் அடைந்திடலாம்!
மரமது நின்று உயிர்களை வளர்த்தல் இயற்கையின்,

மறுவிலா விதியெனும் நிலையை உணர்ந்திடுவோம்!
சிறுமையில்லாதச் சிந்தையால் மனமது நிரம்பிடவே,
திறமை என்னும் திறவுகோல் தானே வந்திடுமே!
உறவும் பிரிவும் உலகியல் காட்டும் தனிவிதியாம்!

ஒவ்வொரு உயிரும் மற்றதை அழித்து வாழ்தல்,
செவ்விய அறமாய்த் திகழ்ந்திடக் காண்போமே!
ஒவ்வொரு நிலையும் உணர்ந்து தெளிந்திடுவோம்!
செவ்வியதாக வாழ்வு (**புத்தாண்டு**) நிறைவை அளித்திடுவே!

**அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

**- கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**
01-12-2024 (இரவு 11-30)